353

[illegible]

R. R. m. 353 - 4 - 1908.

JL75
031m21193, 06
N07.
145549

# தமிழகம்.

353
4.08




சேர் அல்லது வஞ்சி.

தஞ்சை :
கல்யாணசுந்தரம் பவர் பிரஸ்.

வருஷ சந்தா ரூ 1—8—0. | 1907.. | தனிப்பிரதி அணா $2\frac{1}{2}$ / பழையபிரதி அணா 3

சிங்கப்பூர், பினாங்கு முதலான இடங்களுக்கு—ரூ 2—8—0.

*Copyright Registered.*

ஜைத் தமிழ்ச்சங்கத்து மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

C 4554

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

வால்யூம் 2 ] 1907௵ ஆகஸ்டுமீ [ ந. 11

விஷயங்கள். பக்கம்.


1. 1800 வருஷங்களுக்கு முந்திய தமிழகம் .... 251
2. விதியைவென்றவீரர் ... 259
3. கிராமக்கோல்லன் ... 268
4. சேவலும் மாணிக்கமும் ... 270
5. அகாலமழை ... "
6. ஆஸ்தீகமதவாராய்ச்சி ... 272
7. தமிழகச்செய்தி ... 277
8. நச்சினார்க்கினியார் ஞாபகச்சின்ன சம்பந்தமான அறிக்கை விண்ணப்பம் ... 278
9. தஞ்சைத்தமிழ்ச் சங்கத்தஆறும் வருஷ மகோற்சவ அறிக்கைப் பத்திரம் ... 280


பத்திராசிரியர்கள்: தமிழ்ச்சங்கத்துக் காரியதரிசிகள்.


## விசுவநாதம்.

நமது பத்திரிகை வாயிலாக 1905௵ ஜனவரிமீ முதல் வெளிவந்து கொண்டிருந்த "விசுவநாதம்" என்னும் மதுரையை ஆண்ட நாயக்கராஜ வம்சதிலகனும் கீர்த்திப்பிரதாபனுமான விசுவநாதனது சரித்திர சம்பந்த மான நாடகம், படிப்பவர்களுக் கினிமையைத் தரத்தக்கதாய் அகவற்பா வில், எழுதப்பெற்று (1—6—07) சஞ்சிகையில் இனிது முடிவுபெற்றது. இதைப் புத்தகரூபமாக வெளியிடவேண்டுமென்று கூறிய பல நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஐந்து அங்கங்களோடு கூடிய இந்நாடகத்தை டெமி 1/8 சைஸில் 150 பக்கங்களாக உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறேன். (புத்தகம் 1-க்கு விலை ரு 1)

C. S. முத்துஸாமி ஐயர்,
ஊதவித்தமிழ்ப்பண்டிதர், கல்யாணசுந்தரம்,
ஹைஸ்கூல், தஞ்சை.


- 7B -
2
253
4.07
5 - DEC 19..



சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம் 2. } 1907 ௵ ஆகஸ்டு மீ. { நம்பர் 11.

## 1800 வருஷங்களுக்கு முந்திய தமிழகம்.

(225-ம் பக்கத் தொடர்ச்சி.)

காவிரிப்பூம்பட்டினம்:—இப்பட்டினத்தின் சிறப்பைச் சிலப் பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதையிலும் பட்டினப் பாலையி லும் மணிமேகலை சிறைக்கோட்டமறக்கோட்ட மாக்கியகாதை 53 முதல் 116 வரையிலுமுள்ள வரிகளிலும் பரக்கக்காணலாம். இப் பட்டினத்திற்கு புகார் என்றும் காகந்தி என்றும் மறுபெயர்கள் உண்டு. காகந்தன் என்னும் ஓர் அரசன் முன்னொருகாலத்தில் இங்கிருந்து அரசு புரிந்தானாதலால் காகந்தி என்னும் பெயர் இதற்குண்டாகியதாம். 'பெரிப்ளஸ்' கமார என்றும், டாலமி 'கபேரிஸ்' என்றும் கூறிய நகரம் இதுவே.

இப்பட்டினம் முன்காலத்தில் காவிரியாற்றின் சங்கமத்தில் அதன் வடகரையில் கட்டப்பட்டிருந்தது. இப்பொழுது போ ல காவிரியாறு மணலடித்து வாய் மூடி அகலங்குறைந்து இருக்காமல் முகத்துவாரம் அகன்றும் ஆழ்ந்தும் கப்பல் போக்

குவரவுக்கு இசைத்தபடி இருந்தது. இப்பட்டினம் இரு கூறுகப்பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று மருவூர்ப்பாக்கம்; மற்றொன்று பட்டினப்பாக்கம். மருவூர்ப்பாக்கம் சமுத்திரக் கரையோரமானது. பட்டினப்பாக்கம் பட்டினத்தின் மேல்பாகம். இந்த இருபாகத்திற்கும் நடுவே ஓர் விசாலமான பொது நிலமுள்ளது. அவ்வகன்றவெளியில் ஒழுங்கு படும்படியாக அனேகம் மரங்கள் வளர்க்கப்பட்டன. அங்கே ஒரு பெருஞ்சந்தை கூடுவதுண்டு.

"இருபெரு வேந்தர் முனையிடம் போல
விருபாற் பகுதியி னிடைநில மாகிய
கடைகா லியாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போ ரோதையுங் கொள்வோ ரோதையு
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடியில்."

என்பது சிலப்பதிகாரம் V, 67—71.

பட்டினப்பாக்கத்திலுள்ள முக்கியமான வீதிகள் ராஜவீதியும், கொடித்தேர் வீதியும், ஆவணவீதியுமாகும். வாணிகர்களும், மறையோர்களும், உழவர்களும், ஆயுள்வேதரும், காலக்கணிதர்களும் தனித்தனியே இருந்து வாழும் இருக்கைகளையுடைய வீதிகளும் பல. அரண்மனையைச்சுற்றிலும் அரசன் காவற்படையாகும் ரதகஜ துரகபதாதிகள் வசிக்கும் வீதிகள். அவைகளைச் சுற்றி பட்டினப் பாகத்தில் அனேகவீதிகளில் கவிவாணர்களும், ஸ்துதிவாணர்களும, பாணர்களும், நாழிகைக்கணக்கர்களும், நடிகளும், பாடகர்களும், நகைவேழம்பர்களும், மணிகுயிற்றுநர்களும், வளைபோழுநர்களும், பூமாலைதொடுப்போரும், முத்துமாலை வேய்வோரும், இன்னும்பல கைத்தொழிலாளர்களும் கணக்கிறந்தோர் வசித்தனர்.

மருவூர்ப்பாக்கத்தில் சமுத்திரக்கரை யோரமாய்த் துறைமுகத்தில் பண்டங்களிறக்கும் விசாலமான மேடைகளும், வேயாமாடங்களும், சரக்கறைகளும், மாளிகையிடங்களும், பல இருந்தன. மானின்கண்போலக் கோணஞ்செய்த சாளரங்களையுடைய மாளிகைகள் பலவுள்ளன. பண்டங்களையிறக்கியவுடனே அரசனால் நியமிக்கப்பட்ட சுங்கங்கொள்வோர் பண்டங்களைப் பரிசோதனை செய்து அளவுக்குத்தகுந்தபடி சுங்கமிறுத்து அரசன்அச்சடையாளமாகிய புலியைப் பொறித்துப்பிறகு அவைகளைப் புறம்போக்குவார்.

"வேலாழி வியன்றெருவி
னல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத்தொழின் மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்



353

தேர்பூண்ட மாஅபோல
வைகறொறு மசைவின்றி
யுல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவு.
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேறவு
நிலத்தினின்று நீர்ப்பரப்பவு
மளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிமண்டபம்."

என்பது பட்டினப்பாலை. இந்த "ஆழிவியன் தெருவின்" பக்கத்தே உள்ளது யவனர் இருக்கை. அவர் இருக்கையும் அவரால் விலைக்குக்கூறப்படும் பண்டங்களும் "தம்மைக்காண்போர்கண்களை மேற்போக விடாமற்றடுக்கும்" வனப்புள்ளன. பலதேயங்களைவிட்டு வியாபார நிமித்தம் இத்துறைமுகத்திற்கு வந்து பலபாஷைகளைப்பேசிக்கொண்டு கரையோரமான வீதியிலே தங்கிவசிக்கும் மிலேச்சர்கள் பலபேர்கள். வர்ணமும், சுண்ணமும், சாந்தமும், பூவகையும், புகையுறுப்பும், வாசனைகளும், விலைக்கென்று சொல்லி விற்பவர் திரியும் வீதிகள் பலவுண்டு. பட்டுநூலினாலும், மயிரினாலும், பருத்திநூலினாலும், நுண்ணியதொழில்களைத் தமது ஊசியினாற்செய்யும் பட்டுச்சாலியர்களும் சந்தனம் அகில் பட்டுபவளம் முத்துமணிகள் பொன் முதலிய பலவேறுபட்ட பண்டங்களையும் எண்வகைக்கூலங்களையும் குவித்து விற்கும் வீதிகளும் பலவுண்டு. பிட்டுவாணிகரும், அப்பவாணிகரும், கள்ளைவிற்கும் வலைச்சியரும், மீனைவிற்கும் பரதவரும், வெள்ளுப்பு விற்கும் உமணரும், பாசவரும், பஞ்சவாசம் விற்பாரும், மாமிசம் விற்பாரும், வெண்கலக்கன்னாரும், செம்புகொட்டிகளும், மரத்தச்சரும், கொல்லரும், சித்திரகாரிகளும், சிற்பாசாரிகளும், தட்டாரும், இரத்தினப்பணித்தட்டாரும், தையற்காரர்களும், சக்கிலியர்களும், கிழியாலும்கெட்டியாலும் புட்பம், வாடாமாலை, பொய்க்கொண்டை, செண்டு, படிமை, படம், விலங்கு, பறவை, முதலியன செய்யும் கைத்தொழிலாளர்களும், குழல்யாழ் முதலிய கருவிகளை இன்னிசை யெழுப்பும் பாணர்களும், கணக்கிறந்தனராய் மருவூர்ப்பாக்கத்தே வசித்தனர்.

அரசன் அரண்மனை பட்டினப்பாக்கத்திலே இருந்தது. அத

னமைப்பு மிகவும் அழகுள்ளது. மகதநாட்டுப்பிறந்த இரத்தின வேலைக்காரர்களும், மகாராஷ்டிர தேசத்துக் கம்மியர்களும், அவந்தி தேசத்து கொல்லர்களும், யவனதேயத்துத் தச்சர்களும், தமிழகத்துத் தொழிலாளர்களுடன் கூடி நிருமித்த கட்டிடம் அந்த அரண்மனை. அரசன் கொலுவிருந்த சித்திரமண்டபம் பசும் பொற்றகட்டால் வேய்ந்த சுவரினையுடையது. கண்ணைக்கவர்கின்ற காந்தியுடன் விளங்கியது. பவளத்திரள் கால்களின் மீதுவைத்த பன்மணி யிழைத்த போதிகைகளில் எழுந்த விதானம் வெகுதுட்பமாய்ச் சிற்பகாரிகளால் தீட்டப்பட்டிருந்தது. அதன் வரம்புதோறும் முத்துமாலை தொங்கியது.

“மகத வினைஞரு மராட்டக் கம்மரு
மவந்திக் கொல்லரும் யவனத் தச்சருந்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமந் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்
திந்திர திருவன் சென்றினி தேறலும்.”

என்றார் மணிமேகலையார். இச்சித்திர மண்டபமன்றி, அரண்மனையில், காட்சிமிக்க சிலவேறு பாகங்கள் உள்ளன அவைதாம்,

“மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரு
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமு
மவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்.”

என இளங்கோவடிகள் கூறியவண்ணம் வச்சிரநாட்டரசன் கொடுத்த முத்துப்பந்தலும், மகதநாட்டரசன் கொடுத்த ஓலக்கமண்டபமும், அவந்திநாட்டரசன் கொடுத்த தோரணவாசலுமாகும். இவ்விதம் பல உறுப்புகளோடு கூடினதாய்ச் செய்தொழிற் கம்மியர்களால் ஆக்கப்பட்டதாயினும், அவ்வரண்மனையின் பலபாகங்கள் வெவ்வேறிடங்களிலிருந்து கொண்டு வந்து சேர்க்கப்பட்டனவாகையால் அவ்வரண்மனை முழுதையும் மயனெனுந் தெய்வத் தச்சனே அமைத்தானெனில் சொற்குற்ற முண்டாகாது.

“பொன்னினு மணியினும் புனைந்தன வாயினு
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு



மயன் விதித்துக் கொடுத்த மரபின வவைதா
மொருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்து
மரும்பெறன் மரபின் மண்டபம்,”

என்றார் இளங்கோவடிகள். இத்தகையதான அரண்மனையைச்சுற்றி ஓர் பூம்பொழிலுண்டு. அப்பொழிலிடத்தே மரவகைகளும் மலர்வகைகளும் நிறைந்து கண்ணுக்கு விருந்து செய்தன. தீங்குரலுடன் கூடிய பக்ஷிகளும் சிறிய மிருகங்களும் ஆனந்தமாய் வசித்தன. அம்மிருகங்கள்

“குறுங்கா னகுலமு நெடுஞ்செவி முயலும்
பிறழ்ந்துபாய் மானு மிறும்பகலா வெறியும்,”

என்றார் சாத்தனார். அப்பூம்பொழிலினிடத்தே

“எந்திரக் கிணறு மிடுங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியு மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியு
மொளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்”

பல விருந்தன.

அப்பட்டினத்தில் பலகோவில்களுமுண்டு. வச்சிராயுதக்கோட்டமும், ஐராவதக் கோட்டமும், கற்பகத்தருக்கோட்டமும், இந்திரன் கோயிலும், நெடியோன் கோயிலும், முருகவேள்கோயிலும், சிவன்கோயிலும், வெள்ளை மூர்த்திகோயிலும், காமன் கோட்டமும், நிக்கந்தன் கோட்டமும், அருகன் பள்ளியும், புறம்புள்ள ஸ்ரீ கோயிலும் இருந்தன. பட்டினத்தின் மதிலுக்குவெளியே சுடுகாட்டில் யமன்கோட்ட மொன்றிருந்தது. புத்தமுனிவர்கள் வசித்த ஏழு விஹாரங்களும் தருமம் போதிக்கும் மிடங்களுமிருந்தன. மிகவும் புனிதமென்று ஜனங்கள் கொண்டாடிய இரண்டு ஏரிகள் ‘சோமகுண்டம்’ என்றும் ‘சூரியகுண்டம்’ என்றும் வழங்கி வந்தன. அவைகளில் நீராடியவர் போகம் பெறுவராம்.

“சோமகுண்டஞ் சூரிய குண்டத் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்.”

என்கின்றார் இளங்கோவடிகள். கோட்டையைச்சுற்றி வளைந்த அகழியில் அழகுடன் மலர்ந்த புஷ்பங்கள் அனேககோடி. அதனிடத்தே பக்ஷிகளின் தீங்குரலோய்தலில்லை.

“பன்மலர் சிறந்த நன்னீ ரகழிப்
புள்ளொலி சிறந்த”

என்றார் மணிமேகலையார். நகரக்கோட்டை வாசலிலே பொ

றித்துள்ள இச்சோழர்களின் அச்சடையாளமாகியபுலி முத்திரை. ஆதலின் உருத்திரங்கண்ணனார்,

"புலிப்பொறிப் போர்க்கதவில்," என்கின்றார்.

இத்திறம் அழகுவாய்ந்த புகார் பட்டினம் கீழ்கரையிலுள்ள பிரதான பட்டினம். தமிழகத்தில் விற்பனைக்காக யவன தேசத்தில் சேகரித்துக் கப்பலேறி வரும் பண்டங்களும் வெளித்தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யத்தயாரித்த தமிழகத்தின் விளைபொருள்களும் உள்வரவும் வெளிபோகவும் வசதியான துறைமுகம் இதுவே. உருத்திரங்கண்ணனார் தனது பட்டினப்பாலையில் இத்துறைமுகத்தில் வந்துசேரும் பொருள்கள்,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமும்,"

என்று வர்ணிக்கின்றார். இவ்வளவு வர்த்தகமும் செல்வமும் அழகும் வாய்ந்திருந்த பட்டினம் இப்போது இருந்தவிடம் தெரியாமல் அழிந்துபோய்விட்டது.

15. மாவிலங்கையும் அதன் பதிகளும்:—அருவா நாட்டிற்கும் அருவா வடதலை நாட்டிற்கும் ஒரு பெயர் 'மாவிலங்கை' என்பது. புனல் நாட்டுக்கு வடக்கே உள்ளது அருவாநாடு. அதன் வடக்கே உள்ளது அருவா வடதலை. இந்த இரண்டு நாட்டிற்கும் 'மாவிலங்கை' என்று பெயர் வருவானேன் என்றால், இலங்கையைப்போல் நீர்வளமும் விளைபொருளும் உடையனவாம் இவ்விரண்டு நாடுகளும். ஆதலின் இந்நாடுகளை 'மாவிலங்கை' என்றனராம். எவ்விதமெனில், சிறுபாணாற்றுப்படையில் நத்தத்தனார்,

"பொருபுன றரூஉம் போக்கரு மரபிற்
றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்னர்........"

என்கின்றபடி என்க. இந்நாட்டில் வசித்த ஜனங்களுக்கு அருவாலர் என்றும் குறும்பர் என்றும் பெயருண்டு.

**காஞ்சி**:—இந்நாடுகளில் முக்கியபட்டணம் கச்சி. இப்போது நாம் இதனைக்காஞ்சீபுரமென்கின்றோம். தமிழகத்திலுள்ள மற்றைய பட்டணங்களைப்போலவே இதுவும் கோட்டையால் வளைக்கப்பட்டது. ஒரு சோழராஜன் நாம் பேசிவரும் இக்காலத்துக்குச்சற்று முன்னேதான் ஒரு புத்த சைத்தியம் கட்டிவைத்தானென்று தோன்றுகிறது.



"பைம்பூம் போதிப் பகவற் கியற்றிய
சேதியந் தொழுது.................".

என்கின்றார் மணிமேகலையார். (28-ம் காதை). ஒரு விஷ்ணுவாலயமும் இருந்ததாக உருத்திரங்கண்ணனார் தமது பெரும்பாணாற்றுப்படையில்,

"பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னங்கண்."

என்று கூறுகின்றார். இந்நகரத்தையே டாலமி 'மிலங்கா' என்கின்றார்.

**எயிற்பட்டினம்**:—'டாலமி' அருவார்நாயில் உள்ள பட்டினம் 'பிரௌரியன்' என்கிறார். 'பிரௌரியன்' என்ற பதத்திற்கு கிரேக் பாஷையில் 'காப்புடைய கோட்டை' என்பது பொருள். அதாவது, 'எயிற்பட்டினம்' ஆயிற்று. இதனையே 'பெரிப்ளஸ்' கிரந்தகர்த்தா 'சோபட்மா' என்கிறார். அதாவது 'சோபட்டினம்' என்பது. 'சோபட்டினம்' என்பதிற்குத்தமிழில் 'மதில் சூழ்ந்த பட்டினம்' என்று பொருள் உண்டாகும். ஆதலின் இப்பெயரும் எயிற்பட்டினத்திற்கு அமையும். இந்நகரம் நெய்தல் நிலத்தே உள்ள ஓர் துறைமுகம். சிறுபாணாற்றுப்படைபாடிய நல்லூர் நத்தத்தனார் இப்பட்டினத்தை,

"பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம்."

என்று வருணிக்கிறார். இத்துறைமுகத்திலும் மற்று வேறு துறைமுகங்களிலும் 'கலங்கரை ஞெகிழி' கட்டுண்டாம். 'கலங்கரை ஞெகிழி' என்றால் 'மரக்கலங்களை அழைக்கும் விளக்கு' என்பது பொருள். அதாவது இப்போது நாம் விளக்குக்கூண்டுகள் என்று சொல்லுவதுதான். உருத்திரங்கண்ணனார் தனது பெரும்பாணாற்றுப்படையில்,

"வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்
துறைபிறக் கொழியப் போகி * * * ."

என்று எவ்வளவு உண்மையாக இயற்கை வருணனை செய்து மனதைக்களிப்பிக்கின்றார் பாருங்கள்.

இப்பட்டினத்தின் வடபாலுள்ளது ஏற்காடு அல்லது பழவேற்காடு. அதற்கப்பால் வடுகர் வசித்த நாடுகள். அவர் பாஷை 'வடுகு' என்பது. எருமை நாட்டரசன் (மைசூர் அரசன்) அவருக்குத்தலைவன்.

திருப்பதி :—"வடவேங்கடம் தென்குமரி ஆயிடை" என்று கூறிய வண்ணம் தமிழகத்தின் வடக்கு எல்லையில் மலையடிவாரத்திலுள்ளது திருப்பதி. இந்த க்ஷேத்திரத்தின் பெருமையாவருக்கும் தெரிந்தது.

16. மத்திய நாடுகள் :—மலாடு, சீதநாடு, கற்காநாடு, ஆகிய மூன்று நாடுகளும் கடற்கரையோரமாய் உள்ள நாடுகளல்ல. அவைகள் உள்ளடங்கின. அவைகளில் மலாடு அல்லது மலையமான் நாடு புனல் நாட்டிற்கு வடமேற்கும் அருவா நாட்டிற்கு மேற்குமுள்ளது. இந்நாடு 'மலையமான்' என்னும் பட்டந்தரித்த ஓர் சிற்றரசன் நாடாகும். இந்நாட்டின் பிரதான பட்டணம் பெண்ணையாற்றங்கரையோரமாக இருக்கும் கோவல் என்பது. இதனை நாம் இப்போது திருக்கோவலூர் என்கின்றோம்.

மலாட்டிற்கு மேற்கேயுந் தென்மேற்கேயுமுள்ளது சீதநாடு தற்காலத்துக்கோயமுத்தூர் ஜில்லாவும் நீலகிரி மலைப்பிராந்தியமும் இந்தச்சீதநாடாக இருந்திருக்கவேண்டும். சீதநாட்டின் பெயருண்மை தெள்ளிதின் விளங்குகின்றது.

சீதநாட்டிற்கும் மேல்கரையிலுள்ள குடநாட்டிற்கும் மத்தியிலுள்ளது கற்காநாடு. குறிஞ்சி நிலமாதலின் 'கற்காநாடு' என்னப்பட்டது. திருவாங்கூர் இராஜ்ஜியத்தின் வடமேற்கு பாகங்களுக்கெல்லாம் இன்றுகூட 'கக்காநாடு' என்றே பெயராம்.

நமது தமிழகம் 1800 வருஷங்களுக்கு முன்னர் இவ்விதம் செழித்தோங்கியது என்று சங்கநூல்களினால் விளங்குகின்றது. எமதுபடத்திற்காட்டிய தமிழகத்தின் எல்லையையும் பதின்மூன்று நாடுகளையும் நதிகளையும் துறைமுகங்களையும் ஒருவாறு கூறிமுடித்தனம். மற்றொரு சமயம் தமிழகத்தின் தேச சரித்திரத்தையும் நாகரீகத்தையும் பரக்கத்தெரிவிக்கமுயல்வோமாக.

பத்திராசிரியர்.

# விதியை வென்ற வீரர்.

## துணிவு.

பாலாக்லாவ சண்டையின் போது '93வது ஐலாண்டர்கள்' என்ற பட்டாளத்தின் தளகர்த்தனாகிய காலின் காம்பெல் என்பவர் எதிரியாகிய ருஷிய குதிரைப் பட்டாளம் தம்மிலும் பதின்மடங்கதிகமான தொகையாய் வேகத்துடன் தாக்கும்போது, "மனிதர்களே! பின்னிடாதீர்கள்; உங்களில் ஒவ்வொருவனும் நிற்கிற இடத்திலேயே சாகவேண்டும்"! என்றார். அந்தவீரர்களும் "ஆம்! ஆம்! ஸர்காலின்! அப்படியே செய்கிறோம்" என்று திடத்துடன் நின்றார்கள். பின் நடந்த சண்டையில் அப்படியே அவர்கள் வார்த்தை நிறைவேறலாயிற்று.

ஆல்மா யுத்தத்தில் பின்னிட வேண்டிய அவசியமிருந்தபடியால் ஓர் தளகர்த்தன் துவஜம்தாக்குபவனை "கொடிகளை எடுத்துக்கொண்டுபின்வா." என்று உத்திரவுகொடுக்க, அந்தமெய்வீரன் "இல்லை, மனிதர்களைக் கொடியிடம்முன் கொண்டுவா" என்று நின்றுவிட்டான். இந்த தைரிய மொழிகளால் உத்ஸாகமடைந்தவீரர் அந்தச்சண்டையில் வெற்றிபெற்றார் என்றுசொல்லவும் வேண்டுமோ?

பிரான்சுதேசத்து விரோதிகள் டான்டன் என்ற தேசாபிமானியை "எங்களை எதிர்க்கவா துணிந்தாய்" என்று கேட்க, அவன் அளித்த உயர்ந்தபதில், "துணிதல், துணிதல், முடிவின்றித் துணிதலே".

தன்னுடைய மதக்கொள்கைகளை மறுதளித்துவிட்டால் தன்னுயிர் தப்பலாம், என்று பிஷப் கிரான்மர் என்பவர் முதலில் மனங்குழம்பினராயினும் கடைசியில் தன்னை உயிருடன் கொளுத்த வைத்திருந்த நெருப்பண்டையில் தன்னை இங்கிலீஷ் ராஜ்யாதிகாரிகள் கொண்டுபோனபோது தன்மரணத்தினைப்பார்க்க வந்திருந்த ஜனங்களைப்பார்த்து "இப்பொழுது என் மனதை ஊடுருவித்தைக்கும் என் மனசாக்ஷியைப்பற்றிச் சொல்லுகி

றேன்; அதாவது உயிர் ஆசையால் என் மனசாக்ஷிக்கு விரோதமாய் என்கொள்கைகளை மறுத்தெழுதினதே. ஆகவே என் இருதயத்துக்கு விரோதமாய் என்கை குற்றம்செய்தபடியால் இந்தக் கையைத்தான் முதலில்தண்டிக்கவேண்டியது.'' என்று தன்கை எரிந்துபோகும் வரை நெருப்பில் பிடித்திருந்தார். பிறகு உயிர் போம் வரை அந்த இடத்திலிருந்து அசையவுமில்லை, ஒரு சப்தமும் செய்யவுமில்லை.

1750 ஆம் வருஷத்தில் அமெரிக்காவில் வர்ஜினியா என்ற இடத்தில் ஒரு நாள் சிலர் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் ஒரு ஸ்திரீயின் உரத்த அழுகுரலோசைகேட்க ஓடிவந்து பார்க்கையில், அந்த ஸ்திரீ ''ஐயா, ஐயா, என் மகன் அதோ அந்த ஆற்றில் விழுந்துவிட்டான், என்னை இவர்கள் விடமாட்டேனென்கிறார்கள்; பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்; ஐயோ! விடச்செய்யுங்கள்'' என்று கதற பக்கத்தில் நின்றவர்கள் ''இது பைத்தியமாயிருக்கிறது. இவளை விட்டால் ஆற்றில் இவளும் விழுந்துவிடுவாள்'' என, வந்தவர்களில் 18 வயதுள்ள ஓர் பாலியன் உடனே சட்டையைக் கழற்றிவிட்டுக் கர்ஜிக்கும் அந்தக் காட்டாற்றில் குதித்தான் ''தெய்வமே! என் பிள்ளையைக் காப்பாற்ற இவனுக்குப்பலம் கொடு'' என்று அவள் கதற, எல்லோரும் ஆற்றோரம்போய் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வேகமான நீர்ச்சுழல்களோடு அந்த் பாலியன் யுத்தஞ்செய்வதை யாவரும்கண்காணித்துப் பார்த்துக்கொண்டிருக்க, அவன்மும்முறை பிடிக்க முயல, நடுவே நடுவே ஓர் சுழல் வந்து அவனைத் தடுக்க, கடைசியாய்க் குழந்தையைக் கைப்பட்டு வலதுகையால் மேலே தூக்கினான். உடனே பார்த்திருந்தவர்களெல்லோரும் 'ஓ' வென்றலற ஓர் நீர் வீழ்ச்சியில் சிறுவனும் வீரனும் விழுந்து மறைந்தார்கள். சில க்ஷணங்களுக்குள்ளே ''அதோ இருக்கிறார்கள். நல்ல தெய்வமே காப்பாற்றினாயே'' என்று அந்த ஸ்திரீ சந்தோஷக்கூக்குரலிட்டாள். ஆம், அந்த நீர் வீழ்ச்சியிலும் தளராது, குழந்தையை விடாது கீழே இன்னும் நீந்திக்கொண்டு கரையோரமாய் அந்த பாலியன் வர எல்லோரும் ஓடி இருவரையும் கரைசேர்த்தார்கள். குழந்தை பிரக்ஞை தவறி இருந்தது. பாலியன் மிகக்க



ளைத்திருந்தான். நன்றியறிவின் முதிர்ச்சியில் அந்த ஸ்திரீ ''சுவாமி உனக்கு வெகுமதி யளிப்பார். அப்பா, நீ இன்று செய்த வேலைக்குப் பதில் பெரிய காரியங்களெல்லாம் உனக்கு அவர் செய்வார்'' என்று ஆசீர்வதித்தாள். அந்த பாலியனே பிந்தி அமெரிக்காவை சுயஅரசாட்சி அடையச்செய்து அந்த நாட்டின் முதல் அக்கிராசனாதிபதியாயிருந்த ஜார்ஜ் வாஷிங்டன் என்ற பிரபு.

ஓர்முரட்டுப்பிரதேசத்தில்ஜட்ஜிவேலைபார்த்துக்கொண்டிருந்த ஜெனரல் ஜாக்ஸன் என்பவர், ஒரு விசாரணைக்காலத்தில், பயங்கரமான ஓர் மூர்க்கன் கோர்ட்டில் புகுந்து தொந்தரைசெய்ய, அவனைப்பிடிக்க போலீஸ்க்காரர்கள் பயந்து பின்னிட, ஜாக்ஸன் பத்துபோலீஸ்காரரை வரவழைத்துப் பிடிக்கச்சொல்ல அவர்களும் பயந்தார்கள். உடனே துரை 'அப்படியானால் என்னைக்கூப்பிடுங்கள்' என்றுசொல்லி ''இந்தக்கோர்ட்டுஐந்து நிமிஷம் ஒத்திப் போட்டிருக்கிறது'' என்று கீழிறங்கி நேரே திடமாய் அவனைப் பார்த்துக்கொண்டேபோய் அவன் கையில விலங்குபோட்டுவிட்டார். இவர் தைரியத்தாலேயும் கண்ணின் வீர ஒளியாலுமே அவன் பயந்து அடங்கிவிட்டான். பிறகு அந்த முரடன், ''அவர் கண்ணைப்பார்க்க முடியவில்லையடா'' என்று சொன்னான்.

ஸ்பார்ட்டாவுக்கு விரோதமாய்ப்படையெடுத்துப்பிர்ரஸ் என்ற தளகர்த்தன் லாகோனியாவுக்கு எதிரே தன் கூடாரங்களை அடித்திருந்தான். ஸ்பார்ட்டன்களிருந்த நிலையில் தன்னை எதிர்ப்பார்களென்றே அவன் நினைக்கவில்லை. அந்த ஊரில் ஸ்பார்ட்டன்களும் மிகவும் குழப்பி மனங்கலங்கிக்கூடி ஆலோசனைசெய்து பந்தோபஸ்துக்காகத்தங்களுடைய ஸ்திரீகளைக் கிரீட்டுக்கு அனுப்பிவிடுவதாய்த்தீர்மானித்தார்கள். இந்த யோசனை ஸ்திரீகளின் செவிகளில்படவே அவர்களெல்லோரும் ஆர்க்கிடேமியா என்ற தங்கள் ராணியிடம் முறையிட்டார்கள். அந்த மாதுசிரோன்மணி கையில் ஒரு கட்கத்தை எடுத்துக்கொண்டு ஆண்பிள்ளைகள் சபை நடுவே போய் நின்று ''நம்முடைய ஸ்பார்டா அழிந்தபிறகு நாங்களெல்லாம் உயிரோடு இருப்பதாய் உத்தேசமில்லை. நாங்கள் வீரர் மனைவிகள், வீரர் தாய்கள்; செய்யவும் துணியவும் எங்களுக்கு முடியும். உங்கள் பட்டாளத்திற்கூட சண்டை

போடவும், உங்களுடைய வில்லுக்கு நாண் கட்ட எங்களுடைய தலைமயிரை அறுத்துக்கொடுக்கவும் தயாராயிருக்கிறோம்'' என்று சொல்ல, அதனால் உண்டான உணர்ச்சியில் ஊரிலுள்ள ஆண், பெண் அடங்கலும் அன்றிராத்திரியில் பெரிய ஏற்பாடுகள் எல்லாஞ்செய்து மறுநாள் பிரஸ்வந்தபோது அடித்த அடியில் அவன் லாகோனியாவை விட்டுத் திரும்பிவிட்டான். தொண்ணூறாயிரம் டஸ்கன்கள் ரோம் தேசத்துக்கு விரோதமாய்ப் படையெடுத்து வர, அவர்களை ஊருக்குள் நுழையாமற்பண்ண அவ்வூரின் அகழிப்பாலத்தை உடைத்துவிடவேண்டியிருந்தது. அந்தவேலை நடக்கும் வரைக்கும் அந்தச்சிறு பாலத்தின் கோடியில் ஹொரேஷியஸ், லார்ஷியஸ், ஹெர்மினியஸ் என்று மூன்றுவீரர்கள் மட்டுமேபோய் நின்றுகொண்டு தொண்ணூறாயிரம்பேரையும் ''வாருங்கள் பார்ப்போம்'' என்று வீரமொழிகூறினார்கள். இந்த தைரியத்தைப்பார்த்தவுடன் உண்டான ஆச்சரியத்தால் சிறிது நேரம் அவர்கள் நின்றுவிட்டார்கள். பிறகு சிலர்மட்டுமே வந்து இவர்களுடன் சண்டைபோட்டு உயிரிழந்தார்கள். இவ்விதம் ஏற்பட்ட காலதாமதத்துக்குள் பாலத்தை உடைத்துவிட்டார்கள். பாலம் விழுவதற்கு முன் மற்ற இருவரும் உள்ளே திரும்பிவிட்டாலும், ஹொரேஷியஸ் மட்டும் முடிவு மட்டும் இருந்து கடைசியில் அந்தநதியில் குதித்து, அவன் சாகும் வரைக்கும் அவனை நொண்டியாய்ச்செய்த காயம் தனக்குப்பட்டிருந்தும், பத்திரமாய் அக்கரை போய்ச் சேர்ந்தான்.

பிரான்ஸு தேசத்தின் வீரமாது ஜோன் என்பவள் ஜெயமடைந்ததெல்லாம் அவள் துணிந்து தாக்கினதே.

காலன்றுவையாண்ட ஸ்டீபன் என்பவன் தன்னுடைய விரோதிகள் கையிலகப்பட்டபோது ''இப்போதெங்கே உன் கோட்டை'' என்று அவர்கள் கேட்டார்கள். ''இங்கே'' என்று இருதயத்தை தட்டிக்காட்டினான் அந்த வீரன்.

கிறிஸ்தவ மதத்தையே அடியோடு சீர்திருத்தம் செய்த லூத்தர் என்பவரை அவர் நண்பர் சிலர் வொர்ம்ஸ் என்ற ஊருக்குப்போனால் 'உன்னையும் ஜான் ஹஸ்ஸைப்போல் சுட்டெரித்துவி



டுவார்கள்'' என்று பயமுறுத்தியபோது அவர் ''வர்ம்ஸிலிருந்து விட்டென்பர்கு வரையிலும் அவ்விடமிருந்து ஆகாயம்வரையிலும் பரவக்கூடிய நெருப்பை அவர்கள் ஏற்றினாலும் ஈசுவரன்பேரால் அதற்குள் நுழைந்து அவர்களிடம்போய்நிற்பேன்'' என்று சொன்னார். இன்னொருவர் லூத்தரிடம் ''அங்கே போகாதே; போனால் டியூக்ஜார்ஜு உன்னைக் கைதி செய்வார்'' என்றதற்கு ''ஒன்பது நாள்சேர்ந்தாற்போல டியூக்ஜார்ஜிகளாகவே மழைபெய்தாலும் என்னுடைய கடமைப்படி அவ்விடம் போவேன்'' என்று சொல்லி அவ்விடம் போய்த்தன் விரோதிகளெதிரே நின்று 'இங்கேயே நிற்கிறேன்; அது என் கடமை' என்றார்.

குவேக்கர் சங்கத்தைச் சேர்ந்த ஜான்பிரைட் என்பவர் பார்லிமெண்டில் மற்ற மெம்பர்களுக்கு விரோதமான ஒருகொள்கைக்காக உழைக்கப்போயிருந்தபோது ஆரம்பத்தில் இவரைமிகவும் மற்றவர்கள் தொந்தரை செய்தார்கள். அதற்கஞ்சாத ஆண்மை இவரிடமிருந்தது; இவருடைய குணபலமும் பிரசங்கவல்லமையுமே இவரை உன்னத ஸ்திதிக்குக் கொண்டு வந்தது. ஒரு சமயம் ஒரு பிரபு இவரிடம் ''என் மூதாதைகள் இங்கிலாந்தை ஜெயித்தரசாண்ட முதல் வில்லியம் அரசரோடு கூட இவ்விடம் வந்தவர்கள்'' என்று பெருமை பேசினார். அதற்கிவர் ''அப்படி வந்த காரியத்தைத் தவிர வேறொரு காரியமும் அவர்கள் செய்ததாகத்தெரியவில்லையே'' என்றார். இன்னொரு பார்லிமெண்டுமெம்பர் இவருக்கு மூளை வியாதி என்று பரிகாசம்செய்தபோது இவர் அந்த வியாதி வரவே அவருக்கு இடமில்லையென்று பதிலளித்தார்.

''உறுதியோடு கூடிய ஒருமனிதன் திடத்தனாய் நேரில்போய் இந்த உலகமென்ற படாடோபக்காரனைத் தாடியைப் பிடித்திழுத்தால் இலகுவாய் அந்தத்தாடி தன் கையில் வந்துவிடுவதையும், கேவலம் பயங்காளிகளை விரட்டுவதற்காக அது கட்டியிருக்கிறதென்பதையும், அவன் தெரிந்து கொள்வான்'' என்று ஹோல்ம்ஸ் என்னும் வித்துவான் எழுதுகிறார்.

மற்றவர்களெல்லோரும் அதிகாரத்துக்கும் கீர்த்திக்கும் ஆசைப்பட்டுக் குழைந்து முகஸ்துதி பண்ணிக்கொண்டிருக்க

தான்மட்டும் தைரியமாய்நின்று நேர்வழியில் செல்வதற்கு மனோ பலம் மிகவேண்டியிருக்கிறது. உன்னுடைய சிநேகிதர்களெல்லோரும் நல்ல வஸ்திரங்களைத் தரித்து அழகாயிருக்கையில் கிழிந்த வஸ்திரத்தைக் கட்டிக்கொண்டு வெளியில் வரவும் தைரியம் வேண்டியிருக்கிறது. மற்றவர்கள் மோசம்செய்து செல்வராகச்சே, நீ யோக்கியனாய் ஏழையாயிருக்கவும் தைரியம் வேண்டியிருக்கிறது. கூடயிருப்பவர்களெல்லாம் 'ஆம்'. என்று சொல்லும்போது நீ மட்டும் "அல்ல" என்று சொல்லவும் தைரியம் வேண்டியிருக்கிறது. மற்றவர்களெல்லாம் தங்கள் சிரேஷ்டமான கடமைகளையெல்லாம் அலட்சியம் செய்து கீர்த்தியடைந்து சுகிர்தப்பட்டு வரும்போது, அந்தக் கடமைகளுக்காகத் தனியே நின்று மாடுபோலுழைத்து மூலையிலேயே யிருக்கத் தைரியம் வேண்டியிருக்கிறது.

தான் உண்மையாய் மனத்தில் நினைப்பதைச்சொல்லப்பயப்பட்டு வழக்கப்பட்ட பால்யன் பிறகு தனக்கு வேண்டியதை நினைக்கவும் பயப்படுவான்.

நாமாக ஒருகாரியம் செய்ய நாம் எவ்வளவு பயப்படுகிறோம்! பிறர்போலவே நாமும் நடக்கிறோம்.

லோகாசாரம் அல்லது வழக்கம் உத்தரவு செய்ய அதன்படி நாம் நடக்கின்றோம்; அல்லது வைத்தியர் அல்லது புரோகிதர் நடக்கச் சொல்லுகிறார். அவர்களும் தாங்கள் படித்த விதத்துக்கு விரோதமாய் நடக்கவும் துணிகிறதில்லை; நம்முடைய உடை, ஜீவனம், வேலைக்காரர்கள், வண்டிகள் எல்லாம் ஒத்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் விலக்கி விடுகிறோம். இலட்சக்கணக்கான மனிதர்கள் பீரங்கிக்கெதிரே துணிந்து சென்றிருக்கிறார்கள்; ஆனாலும், பொது ஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாய்ச் செல்லப்பயந்து போயிருக்கிறார்கள்.

யுத்தத்துக்குப் போகவேண்டிய தைரியத்தைக் காட்டிலும் ஓர் பொதுஜன முயற்சியில் ஜனங்களுக்குப்பிடிக்காத ஓர் சட்சிக்கார வேலை செய்ய அதிக தைரியம்வேண்டியிருக்கிறது. இந்த உலகத்திலேயே பயம் ஒன்றுக்குத்தான் பயப்படவேண்டியிருக்



கிறது. பெரிய பலசாலிகளுக்குக்கூட சிலசில விஷயங்களில் பயமிருப்பதுபோல மகாவீரனும் சில இடத்தில் பயங்காளியாகிறான். இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வந்தவனைக் கத்தி உருவிவெட்டிய பேதுரு என்ற சீடன் கூட அவருடைய விசாரணைக் காலத்தில் சில ஸ்திரீகள் இவனும் இயேசுவைச்சேர்ந்தவன் என்று சொன்னதைத்தாளாதவனாய், கிறிஸ்துவுக்காக உயிரைக்கொடுக்கத் தயாராயிருப்பதாய் முந்தி சொன்னதையெல்லாம் மறந்து, அவரைத் தெரியவேதெரியாதென்று மறுதளித்தான்.

இந்த உலகத்திலிருப்பதற்கே பிறரைக் கெஞ்சி உத்தரவு கேட்பதுபோலக் குழைந்து கும்பிட்டுக்கொண்டேயிராதே! பயந்தவனிடம் ஒருவரும் பிரியங்கொள்ளார்கள். அது ஒரு வியாதியே தவிர வேறில்லை. மனுஷத்தனமான தைரியமே அழகுடைத்து. புரூனோ என்ற புருஷ சிங்கம் உயிருடன் நெருப்பில் தஹனஞ் செய்யப்படத் தீர்ப்புச்செய்த சமயத்தில் தீர்ப்புச்சொன்ன நியாயாதிபதியைப்பார்த்து, "தீர்ப்புக் கேட்கும் என்னிலும் அந்தத் தீர்ப்பைச்சொல்ல உனக்கு பயமதிகம்" என்றார்.

"நாம் சத்தியத்தைக்கண்டு பயங்கொள்ளுகிறோம், செல்வத்தைக்கண்டு நடுங்குகிறோம், சாவுக்கு பயப்படுகிறோம், நம்மிலொருவரைக்கண்டு மற்றொருவர் பயந்து கொண்டேயிருக்கிறோம்", "ஒரு மனிதனுடைய பாதிஞானம் அவன் தைரியத்தோடுபோகிறது" என்று எமர்ஸன் என்ற அருங்கலைஞர் எழுதுகிறார்.

'கோபம் ஒரு கோழையைக்கூடத் தன்னை மறந்து சண்டைபோடச் செய்யும்,' என்று ஷாப்ட்ஸ்பரி என்பவர் சொல்லுகிறார். நெல்ஸன் என்றகப்பற்றலைவன் சிறுவனாயிருக்கும்போது அவன் பந்துக்களிலொருவர் "பயம் உன்னை இவ்வளவு தூரம் தனியே போகாமல் தடுத்திருக்கும் என்று நினைத்தேன்" என்றபோது நெல்ஸன், "பயமா? அவனை எனக்கு தெரியாது" என்றனன். முதலில் சந்தேகப்பட்டுக்கொண்டேயிருந்தால் பிறகு அந்தச் சந்தேகமே நிறைவேறுகிறது. ஏதாவது ஓர் விஷயத்தைச்செய்து விடுவதாய்த் தீர்மானிப்பதே பாதி காரியத்தைச் செய்ததாகும். "ஒன்றைமுடியாதென்று நினைப்பதேஅதை முடியாததாக்குகிறது. "தைரியமே ஜயம்; அதைரியமே தோல்வி"

சிறு ஆட்டிடையன் தாவீது வேறொன்றும் யோசிக்காமல் அஞ்சாமல் கோலியாத் என்ற இராட்சதன் எதிரில் வந்து தன்னுடைய கவண்டிக்கல்லால் அவனுடைய பொட்டில்அடித்துக் கொன்றது துணிந்து செய்யும் காரியத்தின் பெருமையை அலங்காரமாய்ச் சொல்வது போலிருக்கிறது.

பிரீட்லாண்டு சண்டையில் தலைக்குமேல் ஏராளமாய்க் குண்டுகள் விழுந்து கொண்டிருந்தபோது ஒரு பிரெஞ்சு வீரன் ஒருகுண்டு சமீபத்தில் வந்தபோது தன்னையறியாமல் தலைபைச்சட்டெனகுனிந்தான். அதைப்பார்த்துக் கொண்டிருந்த நெப்போலியன் "தம்பி! அந்த குண்டு உனக்கென்று ஏற்பட்டிருந்தால் நீ பூமியின் கீழே இருபதடி ஆழம் குழிதோண்டி மறைந்திருந்தாலும் அது உன்னைக் கொண்டுபோயிருக்கும்" என்று புன்னகையுடன் சொன்னார்.

"நிச்சயமாய்க்கிடைக்குமா என்று முந்தியோசிக்கிறவர்களால் ஒரு பெரிய காரியமும் முடிந்ததில்லை" என்று ஜார்ஜி எலியட் என்ற ஆங்கிலமாது கூறுகிறாள்.

"நம்முடைய சந்தேகங்களே நமக்கு துரோகிகள்; பிரயத்தனப்படுவதைத் தடுத்து நமக்குக்கிடைக்கக்கூடிய நன்மைகளையெல்லாம் அவை விலக்குகின்றன" என்றார் கவிச்சக்கரவர்த்தி ஆங்கில காளிதாஸர் ஷேக்ஸ்பியர். ஸர்வால்டர்ராலே என்பவர் மரணக்கினை காலத்தில் தேக அசௌக்கியமாயிருந்தார். இவர் சிரத்தை வெட்டப்போகிற போது "என்னுடைய பலஹீனம் வியாதியால் உண்டானதே யொழிய மனத்தால் உண்டானதல்ல' என்று சொல்லி, வெட்டும் ஆயுதத்தைப்பார்த்து அதை எடுத்து முத்தமிட்டு" இது கூரான மருந்து, சகல வியாதியையும் கண்டிக்கும்" என்றார்.

பாரிசேயருடைய அவமதிப்புகளையும், ஜனங்களுடைய திட்டுக்களையும் கிறிஸ்து எவ்வளவு லட்சியப்படுத்தினர்?

நியூயார்க்கில் கலகங்கள் நடந்தபோது அவர்களை அடக்கப்பட்டாளத்துடன் ஜெனரல் பட்ளர் என்பவர் வந்தார். ஆனாலும் வந்தவேகத்தில் தன்னுடைய பட்டாளத்துக்கு முந்தியே கலகம்



நடக்கிற இடத்துக்கு வந்துவிட்டார். அங்கே வந்து ஒரு பீப்பாயை நிறுத்தி அதன்மேல் நின்றுகொண்டு "பாவிகளே! நரகத்திலிருந்துவந்த பிசாசுகளே! உங்களுக்கு மேற்பட்டவர்களையெல்லாம் கொன்று விட்டீர்களோ" என்று மிகவும் ரௌத்திராகாரமானகோபத்துடன் சொன்னார். அந்தக் குரூரமான கலகக்கும்பல் ஊரிலுள்ள போலீஸ் ராணுவத்துக்கே அஞ்சாதிருந்தும் ஒரு மனிதனுடைய தீரச்சொற்களுக்கு முந்தி நடுங்கிவிட்டார்கள்.

தெர்மாபைலீ என்ற இடத்தில் இருந்தஸ்பார்ட்டன்கள் பத்துலட்சம் சேனையோடு வந்த ஷர்ஷா என்ற பெர்ஷிய சக்ரவர்த்தி இவர்களுக்கு விரோதமாய் வந்த சமையத்தில் "நமது எதிரிகள் நமக்கெதிரே வந்துவிட்டார்கள்" என்றார்கள். அதற்கு "அவர்களெதிரே நாம் இருக்கிறோம்" என்றான் அவர்களுடைய தலைவனாகிய லியானிடஸ். "உங்களுடைய ஆயுதங்களையெல்லாம் ஒப்பித்துவிடுங்கள்" என்று ஷர்ஷா சொல்லியனுப்ப, "வந்து எடுத்துக்கொண்டு போங்கள்" என்று மறுமொழியனுப்பினான். "எங்கள் அம்புகள் சூரியனைமறைக்கும்" என்று ஒரு பெர்ஷிய வீரன் வீராப்புப்பேச, "நல்லதாயிற்று! நிழலில் சண்டை செய்யலாம்" என்று இந்த வீரர்களில் ஒருவன் சொன்னான். பிறகு இந்தச்சிலர்மட்டும் உலகத்தில் எப்பொழுதுமில்லாத அவ்வளவு பெரிய சேனையின் செல்லுகையையே தடுத்துவிட்டார்கள் என்பது எப்படி ஆச்சரியமாகும்?

தைரியஸ்தன் மகா வசீகரமுடையவன். இவனோடு பழகுகிறவர்களெல்லாரும் இதை ஒட்டிக்கொள்வார்கள். மனிதர்கள் எல்லாரும் சாவுக்கும் துணிந்து அவன் பின்செல்வார்கள்.

ஜெனரல் கிராண்டுதான் தோல்வியடைந்ததையே தெரிந்து கொள்ளமாட்டார். எதிரி வளைத்துக்கொண்டபோது "சரி! இனிவழிபண்ணிக்கொண்டு போகவேண்டும்" என்றான்.

ஒரு சுண்டெலி ஒரு பூனையைக்கண்டுபயந்து ஒரு ரிஷிபுங்கவரை அடுத்தது. அவர் அதைப் பூனையாய்மாற்றினார் தன்தவமகிமையால். பிறகு நாய்களைக்கண்டு ஓடிவர நாயாகவுஞ் செய்தார். பிறகு புலியால் பயந்து புலியாக மாற்றப் பெற்றும் வேடர்க்கஞ்சி விரைந்தோடிவரக்கண்டமுனிவர் வெறுத்து "திரும்ப எலியாய் மாறு; உன் இருதயம் எலியுடையதாயிருக்கிறபடியால் உனக்குதவிசெய்யப்பயனில்லை" என்றார்.

துணிந்து விடாமல்முயன்றதால் பால்யர்கள் கூடச் செய்திருக்கிற செய்கைகள் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றன. அலெக்ஸாந்தர் இருபதாவது வயதில் சிங்காதனமேறியவர். முப்பத்துமூ

ன்று வயதில் இறந்ததற்கு முந்தி அப்பொழுது தெரிந்த உலகம் முழுமையும் ஜெயித்துவிட்டார்.

ஜூலியஸ் ஸீஸர் எண்ணூறு பட்டணங்கள் பிடித்தார். முன்னூறு ஜாதியாரை அடக்கினார். முப்பதுலட்சம் ஜனங்களைத் தோற்கடித்தார். பிரசங்க வல்லமையில் மிகுந்து பெரிய இராஜ்யாதிகாரியாய் விளங்கிய பிந்தியும் பால்யராகவேயிருந்தார். லாபாயெட்டு ஐரோப்பா பிரெஞ்சு சேனைக்கும் முதல் தளகர்த்தனாகும்போது அவருக்கு இருபதே வயது. பைசா பட்டணத்தில் கடியாரம் கண்டு பிடித்தபோது கலிலேயோவுக்கு வயது பதினெட்டு. கிளாட்ஸ்டன் 22வயதிலேயே பார்லிமெண்டில் சேர்ந்து 24வது வயதில் டிரெஷரிலார்டாக நியமனம் பெற்றார்.

ஷேக்ஸ்பியர் சொல்லுகிறார், "தேனீக்களின் கொட்டுக்குப் பயந்தவன் தேன் சாப்பிடலாயக்கில்லை". அனேகர் ஒரு காரியத்தையும் செய்து முடிக்காத காரணம் அவர்கள் செய்ய ஆரம்பிக்கத் தைரியமில்லாதிருந்ததே.

இதுவரை வாழ்ந்தவருடைய சரித்திரங்களெல்லாவற்றின் கருத்திதன்னவென்றால் "ஆரம்பஞ்செய், ஆரம்பஞ்செய், ஆரம்பஞ்செய்" என்பதே!

க. பிரஹதீசன்.

---

## * கிராமக்கொல்லன்.

---

படர்கிளை யரசின் அடியுளான் கொல்லனக்
கொல்லன் வல்லவன் பல்லமர் கையினன்
கரும்புயத் தசையெலாம் இரும்பிற்செய் பட்டையே.

மயிர்சுருண் டிருண்டு நீண்டு வளரும்
முகமனல் கொளுந்த மிகக்கரிந் திருக்கும்
புருவத்து நெறிவரும் வியர்வையால் நனைதரும்
ஈட்டுவன் தன்னா லியலுமம் மட்டில்
கடன்படா வாழுங் கடைப்பா டுடையனாய்
எவரையு மதியா திறுமாந் திருப்பன்.

*லாங்பெல்லோ (Longfellow) என்ற கவிவாணர் ஆங்கிலபாஷையில் இயற்றிய (The Village Blacksmith) "கிராமக்கொல்லன்" என்னும் பாடலின் மொழிபெயர்ப்பு—(ப - ர்.)



†வாரம் வந்திடும் வாரம் கழிந்திடும்
அருணன் தோன்றி யத்தமிக் கும்வரைத்
துருத்தி யூதலை நிறுத்தக் கண்டிலம்.
கோயில் மணிதான் ஈமக் கனைக்கனல்
சாயுங் காலையில் சதியொத் தொலிப்பபோல்
தாங்குசம் மட்டி தாளமொத் தெறியும்.
பள்ளிவிட் டகம்போம் பிள்ளைக ளுலையை
எட்டிப் பாரா தேகுவா ரல்லர்
காய்ச்சிய இரும்பைக் களிப்பொடு காண்பார்
துருத்தியூ தொலியை யருத்தியொடு கேட்பார்
கதிரடி களத்துச் சிதறும் பதரெனப்
பறக்கும் பொறியைப் பற்றிப் பிடிப்பர்.

ஞாயி றன்று கோயிற் கேகுவன்
புத்திரர் தமக்கு மத்தியில் இருப்பன்
ஆரியர் பிரார்த்தனை யவர்பிர சங்கம்
செவியிடைச் சேர்ப்பன் சிரக்கம்பம் செய்வன்
பாங்குறு தன்மகள் பாடுகீ தத்தைக்
கேட்பன் கேட்டுக் கிளருள மகிழ்வன்
அன்னதை யவள்தாய் அரும்பெறற் சுவர்க்கத்
திருந்து பாடும் இசையென மதிப்பன்
இன்ன தவளை யிமத் திட்டதை
நினைவுறுத் திடுங்கண் ணீர்த்துளி ததும்பும்
கண்ணீ ரைக்கருங் கையிற் றுடைப்பன்.
உழைத்தும் களித்தும் துயர்சிறு துழந்தும்
வாணா ளிந்த வகையிற் செலவிடும்
காலைகண் டிடுமோர் வேலை தொடுப்பதை
மாலைகண் டிடுமால் மற்றதன் முடிவை
ஒன்று செயப்புகும் உற்றதை முடிக்கும்
எடுத்ததை முடிக்குமிஃ திரவிற் சுகந்தரும்.
அந்தமில் போதந் தந்தனை யாதலின்
வந்தனம் உனக்குத் தந்தனம் நண்ப.
இவ்வணம் வாணா ளனுமுலைக் கூடத்
தெம்பெரும் வாழ்வை யியற்றல் வேண்டும்.
இவ்வணம் ஒலிசேர் திலங்குபட் டடையினுஞ்
செயலும் எண்ணமும் சீரிட வேண்டுமே.

ஐ. சுவாமிநாதமுதலியார்.

†"வாரம், மாதம், வருஷம், வரும்போம்" என்பது மற்றோர் பாடம்.

# *சேவலும் மாணிக்கமும்.

(1) சூடு கொண்டு சுடரு முடியது
மாடு கொண்டு வயங்கும் பெடையது
நீடு குப்பை நிலங்கிளைத் தேயிரை
தேடு கின்றது சேவலொன் றாயிடை.

சூடு - உச்சிக்குடுமி. மாடு - பக்கம்.

(2) கண்க வர்ந்திடு காசொன் று கண்டதன்
பண்பு ணர்ந்து நகைத்துப் பகருமால்
மண்ணி டந்தவிம் மாமணி தன்னினே
ரெண்கி டைக்கி னதுபெரி தெற்கரோ.

காசு - மாணிக்கம். எண் - எள்ளு.

(3) பரிதி தன்கதிர்க் கீழகப் பட்டவிவ்
விரிதி ரைக்கடன் மேதினிக் கண்ணவா
மெரிக திர்மணி யாவும் பெறினுநெல்
வருக திர்மணி யொன்றின் மகிழ்வனே.

ஒன்றின் - ஒன்றைப்பெற்றாற்போல.

(4) என்றி கழ்ந்தடி யாலிட றிப்புடை
யொன்று தன்சிறை யொற்றி யெருத்தினை
நன் றுயர்த்தி நவின்றொரு கூக்குரல்
பின்ற னாரிரை தேடப் பெயர்ந்ததே.

எருத்து - பிடர்.

வையை, R. சுப்பிரமணியையர்.

---

# அகால மழை.

இவ்விஷயமாக சென்னை "டைம்ஸ்" பத்திரிகைக்கு பி[illegible] வரும் பொருளுள்ள கடிதம் "காம்மன்ஸென்ஸ்" ("சாமான்[illegible] அறிவு") என்கிற கையெழுத்தோடு ஒரு நிருபநேசர் எழுதி[illegible]ருக்கிறார். அது வருமாறு:—

ஐயா,—பஞ்சாப் துரைத்தனத்தார் நிலவரி வரும்படியா[illegible] 18 இலட்சம் ரூபாய்களும், பாசனக் கால்வாய்களால் கிடைக்கு[illegible] தண்ணீர்வரி வரும்படியில் 15 இலட்சம் ரூபாய்களும் குறைந்த[illegible] போனதாகக் கணக்கு எடுத்திருக்கிறார்கள். சூரியதெரிசன[illegible]

* இதுபவன தேசத்து வித்வான் 'ஈசாப்' செய்த நீதிகதைகளில் முதற்கதை—(ப - ர்.)



பெறும் இவ்வுலகில் நேரிடும் ஒவ்வொரு சம்பவத்திற்கும் ஒரு காரணம் உண்டு; இவ்வாறு அரசிறை வரும்படி குறைந்துபோன தற்குக் காரணம் யாதென்று அடிபிடித்துச் சென்றால், கடைசிக்காரணம் அகால மழைதான் என்று வெளியாகிறது. அகால மழைக்குக் காரணங்கள் யாவை? இதற்கு மறுமொழி நன்றாகத் தெரிந்த ஒரு சங்கதி; இது நன்றாகத் தெரிந்த விஷயம்! ஆனால் அதைப்பற்றி ஒருவரும் யோஜிக்கிறதில்லை. அது யாதெனில் மரமில்லா நாடு மழையில்லா நாடு. ஒரு நாட்டின் மரங்களை அழித்துவிட்டோமானால், அற்ப மழையும் அகால மழையும் அடிக்கடி சம்பவிக்கிறது. காற்றோட்டம் எந்தத்திசையை நோக்கிச்செல்லுகிறது என்பதை அறிகிறதற்கு துரைத்தன கால கணித உத்தியோகஸ்தர் (Meteorologist) உதவியை எதிர்பார்க்கிறோம். காலக்கூறு அறியும் கருவியாகியபாரமானி (Borometer) யால் பாதரஸம் பலான இடங்களில் இறங்கிவிட்டது என்பதைப்பற்றிப்பேசிக்கொள்ளுகிறோம்; ஆனால் அந்தந்தப்பிரதேசங்களுக்கு உரிய விசேஷ காரணங்கள் உண்டு; மழைபெய்வதற்கோ பெய்யாதிருப்பதற்கோ அவைகள் முக்கிய காரணங்களாகி விடுகின்றன; மழையைத்தன்பால் இழுத்துக்கொள்ளக்கூடிய விருட்சங்கள் உள்ள சோலை முதலியவை இல்லாக்குறையும் இவ்வித விசேஷ காரணங்களில் ஒன்றாகும். முற்காலத்துப் பெரியோர் இந்த மர்மத்தை நன்கு அறிந்திருந்தார்கள்; அவர்களுக்குள் பிரபு முதல் ஏழை வரையில் எல்லாரும் அநுஷ்டித்துவந்த விதி ஒன்றுண்டு; அது யாதெனின், யாராவது ஒருவன் ஒரு கனி தின்றால், அவன் அதன் விதையை தானே நிலத்தில் விதைக்கவேண்டியது, அல்லது தன் மனிதன் அதை விதைக்கும்படி செய்து அதைக்கண்ணினாற் பார்க்கவேண்டியது என்பதே. இதனால்விளைந்தபயன் யாதெனின், நமது நாடு வனசமர்த்திபெற்ற கண்டமாகிவிட்டது; அவ்வாறே பூர்வீகத்தில் வளர்க்கப்பட்ட விருட்சங்கள் இன்றைக்கும் செழித்தோங்கி வளர்ந்துவருகின்றன. எல்லாத்திக்குகளிலும் மரம்வளர்த்தல் விஷயத்தில்சர்க்கார்உத்தியோகஸ்தர், சுயமுயற்சியுள்ள கனவான்கள்முதலிய எல்லாரும் கவனம்செலுத்தும்படி துரைத்தன அதிகாரிகள் செய்தால், அகண்டமான சமர்த்தியுள்ள காலோசிதமான மழை பெய்யும். அப்பொழுது பூர்ணபலனைப்பெறுவார்கள். இந்தியாவின் பலபாகங்களிலும்மணற்பாங்கான விஸ்தாரமான தரிசுநிலங்கள் கிடக்கின்றன; அவைகளிற்சிலவற்றை பாலைநிலங்களென்றேசொல்லலாம்; இவைகளைஎல்லாம்சாகுபடிக்குக் கொண்டுவரமுயலவேண்டும். அதற்கு ஒரு வழியாதென்றால், இந்தியாவில் நீர்வளம் நிலவளம் முதலிய சௌகரியங்களுள்ள பிரதேசங்களில், இந்த மரம் வளர்க்கும் முயற்சியை ஆரம்பித்தல்வேண்டும்; தோப்புகளையும் விருட்சங்

களையும் வைத்து சம்ரெட்சிக்கும் வேலையை கிருஷிகர்களுக்கும் இதரர்களுக்கும் போதித்தல்வேண்டும். காமன்சென்ஸ்.

உ. நா. அப்பாசாமி ஐயர்,
மொழிபெயர்த்தோன்.

# ஆஸ்தீக மதவாராய்ச்சி.

## பதி யிலக்கணம்.

(248-ம் பக்கத்தொடர்ச்சி.)

பதியுண்மையை இக்காணுமுலகாற் சாட்சிப்படுத்தி அதற்குரிய அனுபவ முறையுமொருவாறெடுத்துக் கூறினோம். ஈண்டுக் கூறுவான்றொடங்கியது அப்பதியின திலக்கணமும் அவ்வளவைகளான் வெளிப்படுமாறே. வேதமுதல் புராண மீறாகவுள்ள சுருதிகளெல்லாம் இப்பரம்பொருளின் இலட்சணங்களைக் குறித்து வெளிவாக முழங்கவே, அவற்றை யொழித்து யுக்தியனுபவப் பிரமாணங்களான்னிர்ணியிப்பான் புகுந்ததற்குக் காரணம் முன்னர்க் கூறியுள்ளேம்.

பதியுண்மையை ஸ்தாபிப்பான் துணைக்காரணமாய்க்கொண்ட உலகமே மெய்யோ பொய்யோ, உண்மைப்பொருளோ அல்லது தோற்றப்பொருளே வென்றறிதல்வேண்டும். உண்மைப்பொருளாகாவிடின், ஒரு குருடனை மற்றொரு குருடன் வழிகாட்டுதலொக்குமே. சிற்றறிவினர்களாகிய நாம் அறிவனவெல்லாம் ஐம்பொறிகளின் வாயிலாம். ஒருபொருளை அதாவது ஒரு மாங்கனியைக்காணும் வழி, காட்சிக்கு ஒரு உருண்ட வடிவமான தோற்றமும், கையிலெடுக்குங்கால் ஒரு மெய்யுணர்வும், மணந்தால் ஒரு வாசனையுமாகிய வுணர்ச்சிகள் புலப்படுகின்றன. இவ்வித வுணர்ச்சிகள் பின்னொரு சமயம் கூடும்வழி, அம்மாங்கனியைக் கண்டதாக நாம் பகர்வோம். நாம் அறிந்துள்ளது ஐம்புலவறிவல்லாது வேறுண்டோ? இவ்வாறே சடப்பொருள் எல்லாவற்றையுங் கூட்டியுரைத்தல் தகும். மேற்குறித்த புலன்களுக்குப் பின் அவற்றின் வேறாய் அப்புலன்களைக் காரணப்படுத்தவேறொரு மெய்ப்பொருளுண்டோ யில்லையோ என்று நம்மாற் அறிதற்பாற்றன்று. ஆங்கில நாட்டில் இரண்டு தத்துவ சாஸ்திரிகளுக்குள் நடந்தேறின ஒரு விஷயத்தை ஈண்டுக்கூறல் பொருந்தும். அந்நாட்டில் ஒருநாள் மாலை இரண்டு தத்துவசாஸ்திரிகள் தேக சுகத்



பாஷிக்க நேர்ந்தது. அவரிலொருவர் உலகம்மெய்ப்பொருளென்றும், மற்றவர் அது தோற்றப்பொருளேயல்லாது மெய்ப்பொருளாகாதென்றும் அபிப்பிராயங்கொண்டவராயினர். இதைப்பற்றித் தர்க்கப்பட்டுக் கொஞ்சநேரம் நடக்கவே, களைப்பாறல்வேண்டி ஒரு கல்லின்மீதிருந்து தமது தொப்பிகளை மாற்றி மீண்டும் வாதந்தொடங்கினர். மெய்ப்பொருள்வாதி தாம் பகர்ந்த நியாயங்களால் தனது தோழனதப்பிராயம் மாறவில்லை யெனக்கண்டு மனம் புழுங்கித்தனது கருத்து நிறைவேறவோருபாயந்தேடினர். மாயாவாதி பராமுகமாயிருந்து பேசிக்கொண்டிருக்கவே, மற்றவர் தமது கைகொண்டு மாயாவாதியின் தலையைப் பின்பக்கமிருந்தவொரு கற்சுவரில் மெல்லெனத்தாக்கி இப்பொழுது ஒரு கற்சுவரென்ற பொருளுண்டென்று அறியுதியோ? வெனக்கடாயினர். அறியாது கடாயினுய், ஒரு மெய்யுணர்வும் ஒரு வருத்தமுள்ளவுணர்ச்சிவுங்கிடைக்கப்பெற்றேன். அல்லாது வேறொன்றினை எனக்கு நீ கொடுத்தாயல்லை என்று மாயவாதியும் எதிர்மொழி பகரவே, இதைப்பற்றி மீண்டும் வாதித்தல் வீண்வாதமாய்த்திருமென்று விசாரித்து மெய்ப்பொருள் வாதி தன்னுடைய விபரீதமான நடத்தைக்கு மன்னிப்புக்கேட்டுப்பிரிந்து போயினர்.

இந்நாட்டிற்றானே, வேதாந்திகளுளொரு சாரரான மாயாவாதிகள் இக்காணும் பிரவஞ்சம் மித்தையென்றும், தோற்றப்பொருளேயல்லாது மெய்ப்பொருளாகாதென்றுங்கூறுவர். பழுதையிற்பாம்புபோலும் இப்பியில் வெள்ளிபோலும் பிரபஞ்சமாயாசொருபமாய் உள்பொருள்போலத்தோன்றுவதல்லாது உண்மையில் இல்பொருளேயாமென்றும் உருவகப்படுத்தி அவரது வாதஞ்சாதிப்பர். இவ்வுவமைகளைச்சற்றுராய்ந்து நோக்குவாம். இப்பி, வெள்ளியெனவிரண்டு மெய்ப்பொருள்களின் குணங்களைக்கண்டறிந்த வொருவன் திரிவுகாட்சியால் ஒரு சமயம் இப்பியில் வெள்ளி காண்பவனுகுவன். அங்ஙனமே, பழுதை,பாம்பு எனவிரண்டு மெய்ப் பொருள்களின் குணங்கண்டறிந்தவன் திரிவு காட்சியாலோ பயத்தாலோ பழுதையிற்பாம்பு கண்டனனுவன். பயமல்லது அத்திரிவு காட்சி மாறியவழி, மாசறு காட்சியில் அம்மெய்ப்பொருள்களைத்தற் சொருபத்திற்காண்பவனுவன். இதிற்புதுமையென்னை? அவ்வுவமைகளானே பிரவஞ்சஞ் சத்தியப்பொருளெனச் சாதித்தலாகும். மாசறு காட்சியில் பிரவஞ்சப்பொருள் எல்லாக் காலத்திலுமெல்லாருக்கும் வேறுபாடின்றி ஒரு தன்மைத்தாயவுணர்ச்சியுண்டாக்கலின் அதைத்தோற்றப்பொருளெனல் சாலாதெனக் கண்கூடாக்கண்டுணர்க. அது மெய்ப்பொருளென்றே தேறல்தகுதி. அற்றேல் உலகிற்

பேதஞான மின்றி ஆடையெடுப்பான் சென்றவன் குடத்தைக்கொண்டு வருதல் வேண்டும். சடசாஸ்திரம் (Physics), இரசாயனசாஸ்திர (Chemistry) முதலிய லௌகிக சாஸ்திரங்களும் சடப்பொருளை விவரிக்கவே, அச்சட மசத்தியமாயவழி, அவைகளும் பொய்யா யிப்பொழுதடைந்துள்ள மேம்பாட்டைந்திரா வென்பது திண்ணம்.

மெய்யெனக்கண்ட சடத்தினியற்கை யென்ன? மனிதச்செயற்கை யல்லது பிரவேசனமில்லாச்சடத்தின் தற்சுபாவமென்னும்? ...ாஞ்சீவிக்கு மிம்மண்ணுலகின் சில பாகங்கள் அதிதீவிர உட்ணத்தாலும் வேறு சில பாகங்கள் அமிதமான சீதத்தாலும், மனிதசீவிதத்திற்குத்தகாமலிருக்க, உட்ணசாந்தத்திற்குஞ் சீதபேதத்திற்கும் வேண்டிய பிரயோகங்கள் செய்து சீவிதத்திற்கு அநுகூலமாக்கியது மனிதச்செயலே. அனந்தமுயிர்களை ஒருங்கே மடியச்செய்யும் வெள்ளப்பெருக்கு மெரிமலையும் இப்பிரவஞ்சத்தினியற்கைக்குணமே? தெய்வகோப மென்றறிவீனராற் சுநதப்படுங்கொள்ளைநோய் முதலிய அருந்துயருறுத்தும் பிணிகளும் ஆழ்ந்தாராயும் வழி, சிறுபான்மை இச்சடத்தின் குணமென்றே தேறல் வேண்டும். ஒரு நாட்டிற்கொடும் பஞ்சமேற்பட்டுழி, அந்நாட்டிற்கு வேண்டு முண்டிகள் கொண்டுவருகிற நீராவியந்திரமு மனிதனுலாக்கப்பெற்றதே. எனவே, இச்சடவியற்கையே களங்கமற்ற குணமுள்ளதல்லவென்றும், அதன் மலத்தையகற்றிக்குணத்தைக்கைக்கொண்டு தனக்குப்பயன்படச்செய்வதே மனிதனது சிலாக்கிய புத்தி யென்றும் அறிவின் மிக்கோர் கூறியுள்ளார்.* இச்சடம் நித்தமென்றும் இதைக்காரியப்படுத்துகிற மாயை அநாதியே ஆணவமலத்தாற்குண்டுத்தொழிற் பட்டுவருகிறதென்றும் வேதாந்திகளிலொரு சாரான சித்தாந்திகள் கூறுவர். தன்னிமித்தம், இது அசத்து ...சத்தல்லாது) சூன்யம் (சத்தெதிரில் முளைத்திடாமை அல்லது ...ரகாசியாமை) எனப்பெயர் பெறும். இதுபற்றியே இச்சடத்தினைப்பின்வருவாறு உருவகப்படுத்தினர்.

—"அசத்தலாய்
நீரிலெழுத்து நிகழ்கனவும் போய்த்தேரு
மோரினவையின்னுமாரெுப்பு."
சிவஞான போதம் சிவஞான முனிவருரை.
"மின்னனைய பொய்யுடல்."—...ாயுமானவர்.

இனி அறிவு முதிர்ச்சியில்லாத வுயிரினங்களிலும் இக்குற்றமே பரக்கக்காணலாம். இவ்வினங்களில் மாமிச பட்சணிகளாய வர்க்கங்களில் தன்னில் மெலிந்த சந்துவைக்கொன்று புசிப்

* J. S. Mill's Three Essays on Religion. U, P. A. Edition Page 14.



பதே இயற்கைக்குணமாகிவிடுகிறது. மற்றைய வர்க்கங்களிலும் ஒரே காரணத்தால் ஜீவவதை முதலிய கோரசுபாவங்களே குடிகொண்டிருக்கக்காணலாம்.

பிரவஞ்சஞ் சத்திபப்பொருளென்றும் அநாதியே அதுமலத்தாற்புண்பட்டு நிலைபெறின்றி அசத்தாய்த்தோன்றி நின்றழியுஞ் சால்புடைத்தென்றுந்தெற்றெனக்கண்டோம். அச்சடம் அசேதனமாய் நிற்றலான் அதைத்தொழிற்படுத்துவான் அதனின் வேறொரு முழுமுதற்கடவுளுண்டென்றும் ஸ்தாபித்தோம். இம்மண்ணுலகல்லாமல், வேறு மனந்த முலகுகளுளவென்றும் அவையிற்சில இவ்வண்டத்தைவிட அதிவிஸ்திரணமுள்ளனவென்றுங்கணக்கிடப்படுகிறது. இவ்வண்டத்தொகுதி, அம்மம்ம! யாரால் மதிக்கற்பாற்று? இத்தொகுதியின் அததுவாய் நின்று தொழிற்படுத்துங்கடவுளது வலிமையுமென்னும்? "தனதருள் வெளிக்குளே யகிலாண்டகோடியெல்லாந் தங்குபடிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்தழைத்த" பரம்பொருளினதாற்றலை வர்ணிக்கவல்லார்யாரே? இக்காரணம்பற்றியே நமதீசன் தன் வயத்தவன் வரம்பிலாற்றலுடையன் எனப்பெயர்பெற்றனன்.

"அவனசைந்திடி லொருவனுமசைந்திடு
மவனசையா விடி லணுவசைந்திடா
சிவன் சத்தியோடுறிற் செகம்விரிந்திடுஞ்
சிவன் றனித்திடில் விரிசெகமொடுங்குமால்."
வள்ளலார் சாத்திரம்; பதிவிளக்கம்.

செம்பிற்களிம்புபோலும் நெல்லிற்பதர்போலும் அநாதி பசுக்கள் மலத்தாற் பிணிபட்டு மலபெத்தராய்ச் சிற்றறிவினராய்நிற்றலும் இவற்றை யியற்கையானறிந்து அம்மலம் துடைத்து நல்வழிப்படுத்தும் பதி இயற்கை யறிவும் முற்றறிவு முடைத்தாதல் வேண்டும். இப்பிரபஞ்சத்திற் காணும் அமைப்பின்றன்மையை நோக்குங்கால், நிர்விகாரியாகிய பதி பரப்பிரயோசனமாயுயிர்கண்மாட்டிரங்கிப் பேரருளுடையனாய் அவரது துன்பந்துடைத்து இன்பம் நல்குதலே தமது கடமையெனப் பூண்டவனென்பது

நன்குபுலப்படும். இதைப்பற்றியெ, பேரருளன், பாசமோசகன், வரம்பிலின்பமுடையன், என்னுந் திருநாமங்களுக்கும் நம்பதி உரியனுயினன்.

அன்புஞ் சிவமுமிரண்டென் பரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்திலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருப்பாரே"—திருமந்திரம்.

கீட்குறித்த விசாரணையால் நங்கடவுள் நிர்மலனுப், அநாதிமுத்தனுப் நிற்றலான் அதன் காரியமாயுள்ள பிறப்பிறப் பிற்றேயனுய், உதியாமரியான், பிறப்பிலி, இறப்பிலி என நாமங்களும் பூண்டவனுயினன்.

"எல்லார் பிறப்பும் இறப்பும் இயற்பாவலர்தம்
சொல்லாற் றெளிந்தோம்—நம்சோணேசர்
இல்லிற்பிறந்தகதையும்கேளேம்பேருலகில்வாழ்த்துண்டு
இறந்தகதையும் கேட்டிலோம்",

எனவே எண்குணத்தன் நம்மீசனென்று சாத்திரம் கூறும். அவை வருமாறு.

"தன்வயத்தவன்றாயவுடம்பினன்
றுனியற்கை யுணர்வினனுகுதல்
பன்னுமுற்றவுணர்தலியல்பினன்
பாசநீக்குதல் பேரருளாகுதல்
மன்னுமீறிலவாற்றலுடைமையும்
வரம்பிலின்பமுமாகியவெண்குண
மின்னதாகச் சைவாகமமோதுமெம்
மீசன்றனையெப்போதும்வணங்குவாம்"

—வள்ளலார்சாத்திரம்.

பி. கோமதிநாயகம்பிள்ளை பி. எ.

# தமிழகச்செய்தி.

---

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீவாணீவிலாச சபை:—திருமுனைப்பாடிநாட்டின் திருப்பாதிரிப்புலியூர் சந்நதிவீதியிலுள்ள ஸ்ரீமத் ஞானியார்மடாலயத்தில் நடைபெறும் ஸ்ரீவாணீவிலாசசபையின் மூன்றும் வருஷோத்ஸவம் 13—10—07ல் நிகழ்ந்தது. அக்ராசனம் வகித்தவர்கள் கூடலூர் டிஸ்டிரிகட் முன்சீப் ஸ்ரீமான் ஜெ. எம். நல்லசாமிபிள்ளையவர்கள் B. A. B. L. கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், ஏனையர் ஆகிய 600 பேர்கூடினூர்கள். ஷை சபையின் கௌரவகாரியதரிசியார், வைக்கீல் ஸ்ரீமான் நா. சி. குப்புசாமிசெட்டியாரவர்கள் நடந்த ஆண்டில் 57 பிரசங்கங்கள் நடந்தன என்பது முதலிய அடங்கிய அறிக்கையை வாசித்தார்கள். திருநெல்வேலி உசூர் சிரஸ்தேதாரவர்கள் ஸ்ரீமான் P. வெங்கிடசாமி முதலியாரவர்கள் "B. A. இங்கிலீஷ் தமிழ்ப்பாஷைகளின் சில நோக்கங்கள்" என்பதைபற்றியும் ஸ்ரீமான் V. தில்லைநாயகமுதலியாரவர்கள் "பக்தி" என்பதைப்பற்றியும் ஷை மடாலயத்து ஸ்ரீல ஸ்ரீ சுவாமிகள் "திராவிடவேதம்" என்பதைபற்றியும் வெங்கந்தூர் பரமஸ்ரீ கணபதி சாஸ்திரிகள் "ஈசுரநிலை" என்பதைப்பற்றியும் பிரசங்கித்தார்கள். பிறகு அக்ராசனுதிபதி உபந்யாசித்தார்கள். பல இடங்களில் இருந்துவந்த வித்வான்கள்வாழ்த்துச்செய்யுங்கள் கூறினூர்கள். அக்ராசனுதிபதியவர்கள் முதலியோர்க்கு வந்தனம் அளிக்கப்பட்டது. தாம்பூலாதிகள் வழங்கப்பட்டன. இச்சபை என்று மல்குக, பல்குக, வாழ்குக எனப்பல்லாரும் எல்லாம்வல்ல இறைவனை வணங்கி வாழ்த்தினூர்கள்.

உ

## நச்சினார்க்கினியர் ஞாபகச்சின்ன சம்பந்தமான

# அறிக்கை விண்ணப்பம்.

ஐயன்மீர்!

மஹாமஹோபாத்யாயர் ப்ரும்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்களது விருப்பின்படி, மதுரைவாசியும், பண்டை நூலுரை ஆசிரியருமான ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியரது ஞாபகச்சின்னமாக, மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கம், இம்மதுரை மாநகரில் (1) நச்சினார்க்கினியர் புத்தகசாலையும் (2) (ஆங்கிலப் படிக்கும் மாணவர்க்குத் தமிழ் கற்றலில் ஊக்கமளித்தற்பொருட்டு 8-வது வகுப்பு (Senior F. A.) 7-வது வகுப்பு (Junior F. A.) 6-வது வகுப்பு (VI Form) 5-வது வகுப்பு (V Form) 4-வது வகுப்பு (IV Form) ஆகிய இவ்வைந்து வகுப்புகளிலும் பயிலும் மதுரையிலுள்ள நானகலாசாலை மாணவர்கட்கும் அன்னேர்தம் தமிழ்ப் பாடத்திலும் தமிழ்மொழிபெயர்ப்பிலும் தமிழ்வியாசத்திலும் தமிழைப்பிழையற எழுதுதலினும் தக்கபண்டிதர்களைக் கொண்டு பரீக்ஷை நடத்தி அவ்வவ்வகுப்புகளில் முதலாவது பையனுகவும் இரண்டாவது பையனுக்வும் தேறுவோர்க்களிக்கப்படும்) "நச்சினார்க்கினியர் பரிசு"ம் சென்ற விஜயதசமியன்று ஸ்தாபித்துள்ள விஷயம் தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

இப்புத்தகசாலை நாள்தோறும் வளர்பிறையன்னப்பெருகி அபிவிருத்தி அடைந்துவரும் விஷயம் அதற்கென்று வாங்கப்பட்ட நிலைப்பெட்டி (Bureau) நிரம்பிவிட்டதால் இனிது விளங்கும்.

இப்புத்தகசாலை ஏற்பட்டதாலுண்டான நன்மையை மாணவர்க்குத்தமிழ் அபிமான மிகுந்து அதில் 500 பேர்களுக்குக் குறையாமல் புத்தகம்பெற்று படித்திருப்பதால் அறியலாகும்.

ஆயினும் அவசியமாயிருந்து தீரவேண்டியபுத்தகங்கள் இன்னும் பலவுள. அவற்றிற் சிலவாகிய :—கம்பராமாயண மூலம்



(ரூ. 8) கம்பராமாயண வசனம் (ரூ. 8) தமிழ் நவல்கள் (ரூ. 40) தொல்காப்பியம் (ரூ. 6) வீரசோழியம் (ரூ. 1½) ஜீவகசிந்தாமணி (ரூ. 5—8—0) சிலப்பதிகாரம் (ரூ. 5—0—0) சூளாமணி (ரூ. 2) சேதுபுராணவசனம் (ரூ. 1—8—0) திருக்குறள் (ரூ. 8) கலித்தொகை (ரூ. 3—0—0) இலக்கண விளக்கம் (ரூ. 3-0-0) தாயுமானவர்பாடல் (ரூ. 1—8—0) நாலாயிரப்பிரபந்தம் உரையுடன் (ரூ. 20—0—0) மனுதர்மசாஸ்திரம் (ரூ. 3—8—0) முதலியன இன்றியமையாதவைகளாகக் காணப்படுதலின், அவற்றையும், அவை வைப்பதற்கான மற்றோர் நிலைப்பெட்டியும் வாங்க இயன்றபொருளுதவி புரியுமாறு தமிழ் அபிமானியாகிய தங்கள் நல்லுதவியை நயந்துவேண்டுகிறேன்.

ஆதலின் இன்னும் சில தினங்களில் (வருகிற புதன்கிழமை) நடைபெற இருக்கும் ஞாபகச்சின்னத்திருநாளும் நச்சினார்க்கினியர் புத்தகசாலைப் பெருக்கமும் இனிது நிறைவேறும் வண்ணம் மேற்குறித்த புத்தகங்கள் தங்களிடமிருப்பின் அவற்றையேனும், அவைபெற இயன்றபொருளேனும் உதவவும், வேறு புத்தகங்கள் இருப்பினும் அவற்றைக் காலதாமதமின்றி அளிக்கவும்கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாங்கள் அளிக்கும் புத்தகம் பணம் முதலியன எவ்வளவு சிறிதாயினும் வந்தனத்துடன் வருடாந்த அறிக்கையில் அங்கீகரிக்கப்படும்.

தங்கள் சுகவாழ்வும், நீண்ட ஆயுளும் பரோபகார சிந்தையும் மேன்மேலும் ஓங்கத் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்,

மதுரை,
10—10—07.

ம. கோபாலகிருஷ்ணன்,
அக்கிராசனாதிபதி,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்.

உ

கடவுள் துணை.

# தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து ஆறும் வருஷ மஹோற்சவ அறிக்கைப் பத்திரம்.

அக்டோபர்மீ 16௳ விஜயதசமி

1907.

ஐந்தாம் வருஷமஹோற்சவம் நடந்தேறியபின்னர் நமது தமிழ்ச்சங்கத்தின் விருத்திக்கு அநேக இடையூறுகள் உண்டாயின. நாங்களும் ஊக்கத்தில் கொஞ்சம் குறைந்திருந்தோம். இடையூறுகளை அப்பப்போது விலக்கிக்கொள்ளவில்லை. ஆனபடியினால் இந்த வருஷத்து அறிக்கைப்பத்திரம் எங்களுடைய பொறுப்பான கடமைகளை நாங்கள் மனப்பூர்த்தியாய்ச் செய்யவில்லை என்று தெரிவிக்கும். தமிழபிமானிகளான நீங்கள் எங்களை மன்னிப்பீர்களென்று நம்புகிறோம்.

சென்ற வருஷத்தில் எங்கள் கடமைகளை எங்களுக்கு வற்புறுத்திக் காட்டிக்கொண்டுவந்தவர்களை நாங்கள் எங்கள் மனதாறத்துதிக்கின்றோம். இவ்விதம் எங்களுக்கு உற்சாக மூட்டி வந்தவர்களில் ஒருவர் ஹரித்துவாரமங்கலம் தமிழபிமானியாகிய V. கோபாலசுவாமி ரகுநாதராஜாளியார் அவர்கள்; மற்றுவேறு அபிமானிகள் மகா-௱-ஸ்ரீ M. அப்பிரஹாம்பண்டிதரவர்கள், ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைசாமித்தேவர் அவர்கள், எங்கள் அக்கிராஸநாதிபர் மகா-௱-ஸ்ரீ சாமிநாதவிஜயதேவரவர்கள் முதலியவர்கள்.

சென்ற வருஷத்தில் மதுரைத்தமிழ்ச்சங்கத்துத்தலைவர் எங்கள் சங்கத்திற்கு வந்திருந்து கம்பராமாயணத்தில் 13 பாடல்களுக்கு விரிவுரைகூறிப்பிரசங்கித்தார். சென்ற வருஷத்தில் நாங்கள் 16 முறைதான் சங்கங்கூடினோம். அப்போது நாங்கள் படித்த நூல்கள் வில்லிபுத்தூரார் பாரதமும் கம்பராமாயணமும். நாங்கள் ஆராய்ச்சிசெய்த பாடல்களின்தொகை 250.



## புத்தகசாலை.

சங்கத்துப் புத்தகசாலையில் சென்ற வருடாரம்பத்தில் 338 புத்தகங்கள் இருந்தன. இப்போது புத்தகசாலையில் இருப்பன 540. இவ்வருடம் புத்தகசாலைக்குப் புதிதாகப் புத்தகங்கள் உதவிய தமிழபிமானிகளான ஆலங்காடு ரா. சி. சிதம்பரசெட்டியார் அவர்களுக்கும் மகா-௱-ஸ்ரீ C. கோபால ஐயங்கார் அவர்களுக்கும் எங்கள் நன்றியைச் செலுத்துகிறோம்.

## தமிழகம்.

சென்ற வருஷோற்சவத்திற்குப் பிறகு நாங்கள் தமிழகம் என்னும் பத்திரிகையை வெளிவிடாமலிருந்து ஒன்பதுமாதம் கழித்து இவ்வருஷம் ஜூன்மீ முதல் மறுபடியும் துவக்கி சஞ்சிகைகளை வெளியிட்டுவருகிறோம். ஒன்பதுமாதம் நாங்கள் சும்மா இருந்ததின் காரணம் எங்களுடைய ஊக்கக்குறைவே. பல தமிழபிமானிகளையும் போய்க்கண்டு கண்டு இதன் விஷயமாகப் பேசினாலல்லவோ உதவி கிடைக்கும்! அதற்கு எங்களுக்குச் சமயம் வாய்க்காமல் சேயலற்று இருந்துவிட்டோம். இந்த நிலைமையை அறிந்து எங்களுக்கு உதவிபுரியவேண்டி முன்னுக்கு வந்தவர்கள் G. S. மணியா அண்டு கம்பனியார்கள். அவர்கள் உண்மையான தமிழபிமானத்தோடு சங்கத்துக்குப் புரிந்துவரும் பேருதவி மிகவும் கொண்டாடத்தக்கது. எப்படியென்றால், அவர்கள் தாங்களே தமிழகத்தைத் தமது செலவில் அச்சிட்டு வெளிப்படுத்தி லாபம் வரும்போது லாபத்தைச்சங்கத்துக்குக் கொடுப்பதென்று கருதியிருக்கிறார்கள்.

இந்தப்புது ஏற்பாட்டின்படி "தமிழகம்" என்னும் வர்த்தனியின் பரிபாலகர்களும் போஷகர்களுமானவர்கள் G. S. மணியா அண்டு கம்பெனியார்களானாலும் வர்த்தனி தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து வர்த்தனி. அதன் பத்திராசிரியர் தஞ்சைத் தமிழ்ச்சங்கத்துக்காரியதரிசிகளில் ஒருவர்.

இந்த வர்த்தனியின் நோக்கம் ஏற்கனவே சென்ற வருஷத்தில் நாங்கள் அறிவித்ததுபோல வசனநடையைப் பெருக்கலும், சாஸ்திரப்பொருள்களைத் தமிழில் மொழி பெயர்த்தலும், நவீன வழியில் தமிழை அபிவிருத்தி செய்தலுமாகும்.

## தமிழ்க்கலாசாலை.

இக்கலாசாலை இவ்வருடத்தில் நடத்தப்படவில்லை. ஏனென்றால் இதனை நடத்துவதற்குச் சென்ற வருஷத்தில் எங்களுக்கு உதவிபுரிந்த பண்டிதர்கள் பல அசௌகரியங்களால் விலகிவிடும்படிநேரிட்டது. நாங்களும் எங்கள் தொழில்வேலைகளாற் கவரப்பட்டநேரம்போக ஒழிந்தவேளைகளை இதற்குச்செலவிட முடியவில்லை. எங்கள் கடமையை நாங்கள் செய்யாத குற்றத்திற்குப் பொதுஜனப்பிரியர்களாகிய நீங்கள் மன்னிப்பீர்களென்று நம்புகிறோம்.

ஆயினும் இந்த வருஷத்தில் நாங்கள் தஞ்சை மாணவர்களின் 7 பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தாக்கிரால்நடத்தப்படும் ஆங்கிலத் தமிழ்ப்பரீட்சைக்கு அனுப்பி இருக்கிறோம்.

## வரவுசேலவு கணக்கு.

சென்ற வருஷாந்தர மகோற்சவத்தை நடத்திவைத்தவர்கள் பாப்பாநாட்டு ஜெமீன்தார் அவர்களும் இச்சங்கத்தலைவருமான ஸ்ரீமான் சுவாமிநாதவிஜயத்தேவர் அவர்களும், ஹரித்துவாரமங்கலம் V. கோபாலசுவாமிரகுநாத ராஜாளியாரவர்களும், தஞ்சைக் கருணாநிதியாகிய M. அம்பிரஹாம்பண்டிதர் அவர்களும், முனிசிபல் சேர்மேனாகிய ஸ்ரீமான் T. D. சுவாமிநாதஐயரவர்களுமே. சென்றவருஷத்து அறிக்கைப்பத்திரத்திற்காட்டிய கையிருப்புத்தொகையாகிய ரூ 68 அணா 15யும் G. S. மணியா அண்டு கம்பெனியாரவர்களுக்கு நாங்கள் செலுத்தவேண்டிய பாக்கித்தொகையில்செல்லுவைத்துவிட்டோம். இவ்வருஷத்தில் வரும்படியுமில்லை. செலவுமில்லை சில சில்லரைச் செலவுகள் ஈசனருளால் எப்படியோ நடந்து வருகின்றன.

பொதுவாக எங்கள்வேண்டுகோளென்னவென்றால் தமிழபிமானிகள் யாவரும் இத்தமிழ்ச்சங்கத்தைப்பரிபாலிப்பது தங்கள் தங்கள் கடமை என்று உணருமாறு கடவுள் கிருபை புரியவேண்டுமென்பதே.

சுபமஸ்து

| | |
|---|---|
| தஞ்சைத்தமிழ்ச்சங்கம் | தி. இராஜமையங்கார், |
| 16—10—07 | உ. நா. அப்பாஸாமி அய்யர். |

# ௨/தமிழகம்.

இது தஞ்சைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஒரு பத்திரிகை. இதன் வருஷ சந்தா இந்தியா, பர்மாவுக்கு ரூ 1—8—0 சிங்கப்பூர், பினாங்கு முதலான இடங்களுக்கு ரூ 2—8—0. இப் பத்திரிகை வேண்டுவோர் இதன் மானேஜர் அவர்களிடத்தில் சந்தாவை முன்பணமாக நேரே செலுத்தியாகிலும், மணியார்டர் மூலமாய் அனுப்பியாகிலும் பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம். பல நண்பர்களின் வேண்டுகோளிற்கிணங்கி மாணாக்கர்களுக்குச் சந்தாவைக் குறைத்திருக்கிறோம். ஆங்கில கலாசாலையிற் படிக்கும் மாணாக்கர்கள் தமது தலைமை உபாத்தியாயர் மூலமாய் விண்ணப்பம் செய்து கொள்ளுவார்களானால் அவர்களுக்குப் பத்திரிகை ரூ 1—0—0-க்குக் கொடுக்கப்படும். பத்திரிகைக்கு விஷயம் எழுதி விரும்புகிறவர்கள் தங்கள் வியாசங்களை பத்திராசிரியர் அவர்களுக்கு அனுப்பக் கோருகிறோம்.

[illegible] போடுவதற்கு வரி யொன்றுக்கு அணா 1. நீடித்த காலம் [illegible] போடுபவர்களுக்குப் பிரத்தியேக ஏற்பாடு செய்யப்படும்.

மற்ற [illegible]களையும் மானேஜர் அவர்களுக்கு தெரிவித்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**G. S. மணியா & Co.,**
மானேஜர்கள், தமிழகம்,
தஞ்சை.

## புத்தக விளம்பரம்

இனிக் [illegible] கண்டிருக்கும் புத்தகங்கள் தஞ்சைத் தமிழ்ச் சங்கத்தில் [illegible]. வேண்டியவர்கள் ஷை சங்கக் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1. | சத்தியசிந்தாமணி, (ஸமஸ்கிருதவசனம்) காவியம் (ஸ்ரீ ஜிய சிம்மகுரியினால் செய்யப்பட்டது) | ரூ. அ. ப. 2—0—0 |
| 2. | க்ஷத்திரசூடாமணி, (ஸமஸ்கிருதகாவியம்) காலிகோகட்டிடம். | 0—15—0 |
| 3. | ஜீவந்தர சம்புகாவியம், ஸம்ஸ்கிருதம் (ஹரிசந்திர மகாகவி) | 1—0—0 |
| 4. | தஞ்சை நாயக ராஜவம்சசரித்திரச் சுருக்கம் (தமிழ்) | 0—2—6 |
| 5. | ஸம்ஸ்கிருத நீதிமஞ்சரி, நம்பர் 1. | 0—6—0 |
| 6. | சுவாமிநாதவிஜயம். | 0—1—0 |
| 7. | தொல்காப்பியப்பாயிர விருத்தி. | 2— —0 |
| 8. | மாலைமாற்று மாலை. | 0—4—0 |
| 9. | சிவக்ஷேத்திர யாத்திரா நுகூலம். | 0—4—0 |
| 10. | சுதேச வைத்திய ரத்தினம் | 0-12—0 |
| 11. | விசுவநாதம் (ஒரு தமிழ்நாடகம்) | 1—0—0 |

தஞ்சைத் தமிழ்ச்சங்கம்,
12—6—07.

தி. இராஜமையங்கார்,
காரியதரிசி.